

ஒகி புயலால் பாதிக்கப்பட்டு கடலில் தத்தளித்து இந்திய கப்பற்படையால் மீட்கப்பட்டு, தற்போது ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் கன்னியாகுமரி மாவட்ட நீரோடி மீனவ கிராமத்தைச் சார்ந்த மீனவர்களை, மீன்வளத்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபாணி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.12.2017) நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

செ.வெ.எண் : 933/2017 நாள் : 07.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நீரோடி மீனவக் கிராமத்தைச் சார்ந்த மீனவர்களை**

**மீன்வளத்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபாணி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.**

ஒகி புயலால் பாதிக்கப்பட்டு கடலில் தத்தளித்து இந்திய கப்பற்படையால் மீட்கப்பட்டு, தற்போது ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நீரோடி மீனவக் கிராமத்தைச் சார்ந்த மீனவர்களை, மீன்வளத்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபாணி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.12.2017) நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

கன்னியாகுமரி மாவட்டம், நீரோடி மீனவக் கிராமத்தைச் சார்ந்த 5 மீனவர்கள் நவம்பர் மாதம் 28-ம் தேதி நீரோடி மீனவ கிராமத்திலிருந்து வள்ளத்தில் கடலில் மீன்பிடித் தொழிலுக்காக சென்றுள்ளனர். 30-11-2017 அன்று புயலில் சிக்கி வள்ளம் கவிழ்ந்து 5 மீனவர்களும் கடலில் தத்தளித்துள்ளனர்.

கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 3 மீனவர்கள் திரு.சேவியர், திரு.ஈஸ்டர்பாய், மற்றும் திரு.முத்தப்பன் ஆகியயோர், அவர்களுடன் சென்று மரணமடைந்த 2 மீனவர்களது உடல்களும் இந்திய கப்பற்படையால் மீட்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, உயிருடன் மீட்கப்பட்ட 3 மீனவர்களும் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. அதில் திரு. சேவியர் தீவிர சிகிச்சை பிரிவில் இடது கை மற்றும் வலது கால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மீனவர்களை, மீன்வளத்துறை இயக்குநர் திரு. தண்டபாணி,இ.ஆ.ப. (07.12.17) இன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்த நிகழ்வின்போது மாநில மீனவர் கூட்டுறவு இணையத் தலைவர் திரு. சேவியர் மனோகரன், ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர், திரு. ஆறுமுகம் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**